# மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 11999/2018/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **30.01.2019 காலை 11.00 மணி** |
| **தலைமை** | - | **டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

## பொருள் எண் 1

பொருள் பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் – தனிஅலுவலராக பொறுப்பேற்றது – பதவிக்காலம் நீட்டிப்புக்கு தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டது– மன்றத்திற்கு சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை
1. தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட (3வது சட்ட திருத்தம்) அவசர சட்டம் 2016 (தமிழ்நாடு அவசரச்சட்டம் 2/2016) நாள்.17.10.2016
2. அரசாணை (எம்எஸ்) எண்.147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்கள்) துறை, நாள்.24.10.2016.
3. மன்ற தீர்மான எண்.106 நாள்.11.11.2016
4. தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.297 நாள்.31.12.2016 அறிவிக்கை எண்.5 (அரசாணை(எம்எஸ்) எண்.187, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) , 31.12.2016)
5. மன்ற தீர்மான எண்.321 நாள்.25.01.2017
6. அரசாணை (எம்எஸ்) எண்.67 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை, நாள்.29.06.2017
7. மன்ற தீர்மான எண்.166 நாள்.19.07.2017
8. அரசாணை (எம்எஸ்) எண்.135, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை, நாள்.29.12.2017
9. மன்ற தீர்மான எண். 1 நாள்.29.01.2018
10. தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.236 நாள்.30.06.2018 அறிவிக்கை எண்.5
11. அரசாணை (எம்எஸ்) எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை, நாள்.31.12.2018
12. மன்ற தீர்மான எண். 180 நாள்.03.08.2018
13. தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.428 நாள்.31.12.2018 அறிவிக்கை எண்.5

----

1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் பிரிவு எண்.511–AAA பார்வை 1ல் காணும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட (3வது சட்ட திருத்தம்) அவசர சட்டம் 2016ன் (தமிழ்நாடு அவசரச்சட்டம் 2/2016) மூலமாக சேர்க்கப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தை கவனிக்க தனி அலுவலர் நியமிக்க வகை செய்யப்பட்டு அதனடிப்படையில் பார்வை 2ல் காணும் அரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை IIIன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஆணையாளர் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி தனிஅலுவலராக நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து டாக்டர்.க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் 25.10.2016 முற்பகல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் தனி அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டதை பார்வை 3ல் காணும் மன்ற தீர்மானத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பார்வை 4ல் காணும் சிறப்பு அரசிதழின் அறிவிக்கை எண்.5ன்டி கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 31.12.2016 வரை என இருந்ததை 30.06.2017 வரை என திருத்தம் செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 6ல் காணும் அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 01.07.2017 முதல் ஆறு மாத காலம் அல்லது சாதாரண தேர்தல் நடத்தப்பெற்று முதல் மாமன்ற கூட்டம் நடைபெறும் நாள் வரை உள்ள காலம் இதில் எது முன்னதாக நடைபெறுகிறதோ அது வரைக்கும் என்று நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 8ல் காணும் அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சி தனி அலுவலர் அவர்களின் பதவிக்காலம் 01.07.2017 முதல் ஆறுமாத காலம் நீட்டிப்பு செய்ததை 01.01.2018 முதல் 30.06.2018 வரை நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பார்வை 10ல் காணும் காணும் சிறப்பு அரசிதழின் அறிவிக்கை எண்.5ன்டி கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 01.07.2018 முதல் 31.12.2018 வரை நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 11ல் காணும் அரசாணையில், கோயம்புத்தூர் மாநகராட்சி தனி அலுவலர் அவர்களின் பதவிக்காலம் 01.07.2018 முதல் ஆறு மாத காலம் நீட்டிப்பு செய்ததை 01.01.2019 முதல் 30.06.2019 வரை ஆறுமாத காலம் நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பார்வை 13ல் காணும் காணும் சிறப்பு அரசிதழின் அறிவிக்கை எண்.5ன்டி கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவி காலம் 01.01.2019 முதல் 30.06.2019 வரை நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராக 01.01.2019 முதல் 30.06.2019 வரை நீட்டிப்பு செய்து வெளியிடப்பட்ட பார்வை 13ல் காணும் சிறப்பு அரசிதழை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பதிவு செய்யலாம் ந.க.எண்.9129/2016/எம்சி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 1 நாள் 30.01.2019</u>**

பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 36க்கு உட்பட்ட பூங்கா நகர் பகுதியில் உள்ள பாதாளச் சாக்கடை குழ்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்பொழுது இப்பகுதியில் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலையின் ஒரு பகுதியில் உள்ள பாதாளசாக்கடை குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் குடியிருப்பு பகுதிகளுக்கு சென்று சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. எனவே இப்பழுதடைந்த பாதாளசாக்கடை குழாய்களுக்கு பதிலாக புதிதாக பாதாளசாக்கடை குழாய் அமைத்து தொட்டிகளை புதுபித்து கட்ட வேண்டியுள்ளது. எனவே இப்பணி மிகவும் அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், இப்பணிக்கு மதிப்பீடு ரூ.9,75,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்: 82 /2019/எம்டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 2 நாள் 30.01.2019</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு வார்டு எண் 8 – க்குட்பட்ட பாலாஜி நகர் மற்றும் அன்னை இந்திரா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் திரும்பக்கட்டுதல் சிறுபாலம் கட்டுதல் மற்றும் மூடுபலகை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 761 / 2019/ MD2 | வார்டு எண் 8 – க்குட்பட்ட பாலாஜி நகர் மற்றும்அன்னை இந்திரா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் திரும்பக்கட்டுதல் சிறுபாலம் கட்டுதல் மற்றும் மூடுபலகை அமைத்தல் | 35.00 |

இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 761/2019/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 3 நாள் 30.01.2019</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் கணபதி குடிநீர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | ந.க.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 762/19/ எம்.டி.2 | வடக்கு மண்டலம் கணபதி குடிநீர் பிரிவுக்குட்பட்ட வார்டு எண்–40ல் ஆவாரம்பாளையம் சாலை ரயில்வே மேம்பாலம் கட்டுமான பணி நடைபெறும் பகுதியில் இடையூறாகவுள்ள 450 மி.மீ விட்டமுள்ள பில்லூர் பிரதான குடிநீர் குழாயினை மாற்றி அமைத்தல் பணி செய்தல். | 38.25 |

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 762/2019/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 4 நாள் 30.01.2019</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

பார்வை

1 அரசாணை எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.19.12.2012.

2 மாமன்ற தீர்மான எண்.418 நாள்.18.03.2013.

3 நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியாக அனுப்பப்பட்ட இவ்வலுவலக இதே எண்ணிட்ட கருத்துரு நாள்.29.04.2013.

4 நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.8248/2013/எம்சிஎ2 நாள்.17.10.2013
இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.23.10.2013

5 இவ்வலுவலக இதே எண்ணிட்ட ஆணையாளர் அவர்களின் நேர்முகக் கடிதம் நாள். 10.04.2014.

6 இணை இயக்குநர் (மாநகராட்சி), சென்னை அவர்களுக்கு அனுப்பிய இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.11.05.2015.

7 இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.04.08.2015 மற்றும் 23.09.2016

8 இதே எண்ணிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள். 03.08.2017

9 இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.06.09.2017

10 அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.11.10.2017

11 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13920/2018/ஜே 2 நாள்.16.05.2018

12 இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.13.08.2018 மற்றும் 07.09.2018

13 தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களின் விண்ணப்பம் நாள்.21.08.2018

14 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13920/2018/ஜே2 நாள்.20.09.2018

15 இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.13.11.2018

16 ஈரோடு மாநகராட்சி, மண்டலம் III உதவி ஆணையாளர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை நாள்.12.11.2018

17 குடிநீர் தொட்டி இயக்குபவர்கள், வடவள்ளி மற்றும் வீரகேரளம் தொகுப்பூதிய பணியாளர்களின் விண்ணப்பம் நாள்.23.10.2018 மற்றும் 20.12.2018

18 மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை நாள்.03.01.2019

19 வேலூர் மாநகராட்சி மண்டலம் 1 உதவி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.77/2017/எச் 1/ம1 நாள்.31.12.2018 மற்றும் 08.01.2019

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வந்த 59 தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை இம்மாநகராட்சியுடன் இணைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பார்வை 2ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் மேற்படி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செயற்குறிப்பில் மேற்காணும் 59 பணியாளர்களில் பணி ஓய்வு மற்றும் காலமான நபர்களை தவிர மீதமுள்ள 52 நபர்களை பார்வை 1ல் காணும் அரசாணை வெளியிடப்பட்ட நாளான 19.12.2012 முதல் பணியாளர்களின் காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்து தருமாறு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் பார்வை 4ல் காணும் கடிதத்தில் மேற்படி பணியாளர்களின் பணி விபரங்களை கோரியதை தொடர்ந்து பார்வை 5, 6 மற்றும் 7ல் காணும் இவ்வலுவலக கடிதங்களின் மூலம் பதில் அனுப்பி வைக்கப்பட்டது.

தற்போது பார்வை 1ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்ட தொகுப்பூதிய பணியாளர்களில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| மொத்த பணியாளர்கள் | | = 59 |
| இறந்த பணியாளர்கள் | = 7 | |
| நீண்ட நாட்கள் பணிக்கு வராதவர்கள் | = 6 | |
| பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் | = 14 | |
| | ----- | 27 |
| | | ----- |
| பணிபுரிந்து வருபவர்கள் | | 32 |
| | | ====== |

பார்வை 10ல் காணும் அரசாணையின்படியும் மற்றும் பார்வை 11ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் மாமன்ற தீர்மான எண்.276 நாள்.03.08.2018ல் தீர்மானம் நிறைவேற்றி 8 தினக்கூலி பணியாளர்களுக்கு அரசாணை அரசிதழில் வெளியிட்ட நாளான 22.11.2017 முதல் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கவும், அகவிலைப்படி 22.11.2017 முதல் 31.03.2019 முடிய வழங்கவும் ஆணையிடப்பட்டு ஊதியம் பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் இம்மாநகராட்சியில் பணிபுரியும் தொகுப்பூதிய பணியாளர்கள் பார்வை 10ல் காணும் அரசாணையின்படி தங்களுக்கு ஊதியம் உயர்த்தி வழங்குமாறும் மற்றும் 7வது ஊதியக்குழுவின் படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்குமாறும் பார்வை 13 மற்றும் 17ல் காணும் விண்ணப்பங்களில் கோரியுள்ளனர். மேலும் காஞ்சிபுரம் பெருநகராட்சி ,புதுக்கோட்டை நகராட்சி, கரூர் நகராட்சி மற்றும் விழுப்புரம் நகராட்சியிலும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு ஊழியர்களுக்கு அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.11.10.2017ன்படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனால் தங்களுக்கும் மேற்படி அரசாணையின்படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்குமாறு கோரி மேற்படி செயல்முறை ஆணைகள் விண்ணப்பத்துடன் இணைத்து இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளனர். மேலும் ஈரோடு மாநகராட்சி மற்றும் மதுரை மாநகராட்சியிலும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு வழங்கியது போல் தங்களுக்கும் மேற்படி அரசாணையின்படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்குமாறு கோரியுள்ளனர்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியில் அரசாணை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.12.2012ன்படி ஈர்க்கப்பட்ட தொகுப்பூதிய பணியாளர்களுக்கு அரசாணை எண்.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.11.10.2017ன்படி காஞ்சிபுரம் பெருநகராட்சி மற்றும் விழுப்புரம் நகராட்சியில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கியது போல் வழங்குவது குறித்து தெளிவுரை வேண்டி 13.11.2018ம் தேதிய கடிதத்தின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு திரு.ஆர். ராஜசெல்வன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட W.P.(MD) No.24081 of 2018 என்ற எண்ணிட்ட பொதுநல வழக்கிற்கு பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற இறுதி தீர்ப்பாணை நாள்.20.12.2018ன்படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளதால் தங்களுக்கும் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்குமாறு தொடர்ந்து இம்மாநகராட்சி தொகுப்பூதிய பணியாளர்கள் விண்ணப்பித்து வருகிறார்கள்.

பார்வை 18ல் காணும் மதுரை மாநகராட்சி செயல்முறை ஆணையில் பொதுநல வழக்கிற்கு பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற இறுதி தீர்ப்பாணையில் கீழ்க்கண்டவாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘’ The workers engaged by the Madurai Corporation and classified under the head consolidated pay workers ‘’ should be given a consolidated pay of Rs.16,725/- per month in tune with the consolidated pay paid by the Erode Corporation. The revised wages should be paid from the month of December 2018 by RTGS/ Bank transfer.

The 26 sweepers working in the High court campus should be permitted to sign the attendendance register maintained by the Supervisor appointed by the Madurai Corporation to supervise the work inside the campus forthwith. They should report for duty at 8.30 am and sign the register available with the supervisor stationed at the High court campus from 21 December 2018 onwards. The register should be verified and certified by the concerned officials of the Corporation once in a week''

உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வந்த தொகுப்பூதிய பணியாளர்களை பார்வை 1ல் காணும் அரசாணையின்படி தொகுப்பூதிய பணியாளர்களாக பணி ஈர்க்கப்பட்டு கீழ்கண்டவாறு பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி திரு /திருமதி | அரசாணையின்படி பணியாளர்களின் வகைப்பாடு | தற்போது பெற்றும் வரும் ஊதியம் நாள் ஒன்றுக்கு | அரசாணையின்படி நிர்ணயம் செய்யப்படும் ஊதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Per Month | Per day | Per Hour |
| 1 | கே. ராஜேந்திரன்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1515/– | 13000 | 500 | 62.50 |
| 2 | எஸ். தர்மராஜ்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1515/– | 13000 | 500 | 62.50 |
| 3 | கே. தங்கராஜ்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1380/– | 13000 | 500 | 62.50 |
| 4 | ஆர். பழனிசாமி,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1380/– | 13000 | 500 | 62.50 |
| 5 | பி. முருகன்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1380/– | 13000 | 500 | 62.50 |
| 6 | சுப்பையன்<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1500/– | 13000 | 500 | 62.50 |
| 7 | கே. நடராஜன்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 2400/– | 13000 | 500 | 62.50 |
| 8 | கே. ரங்கராஜ்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1800/– | 13000 | 500 | 62.50 |
| 9 | கே. எம். துரைசாமி,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1800/– | 13000 | 500 | 62.50 |
| 10 | எம். நஞ்சன்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1800/– | 13000 | 500 | 62.50 |
| 11 | பி. ஆறுமுகம்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1800/– | 13000 | 500 | 62.50 |
| 12 | பரமேஸ்வரன்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 1530/– | 13000 | 500 | 62.50 |
| 13 | செந்தில்,<br>துப்புரவு பணியாளர் | Ukskilled | 2000/– | 13000 | 500 | 62.50 |
| 14 | பி. ராஜன்,<br>துப்புரவு பணியாளர் | Ukskilled | 2000/– | 13000 | 500 | 62.50 |
| 15 | சரவணச் செல்வன்,<br>துப்புரவு பணியாளர் | Ukskilled | 2000/– | 13000 | 500 | 62.50 |
| 16 | சுந்தர்ராஜன்,<br>துப்புரவு பணியாளர் | Ukskilled | 2000/– | 13000 | 500 | 62.50 |
| 17 | பொன்னுசாமி,<br>துப்புரவு பணியாளர் | Ukskilled | 2000/– | 13000 | 500 | 62.50 |
| 18 | ரவிச் சந்திரன்,<br>துப்புரவு பணியாளர் | Ukskilled | 2000/– | 13000 | 500 | 62.50 |
| 19 | செண்டு,<br>கழிப்பிடம் துலக்குபவர் | Ukskilled | 1430/– | 13000 | 500 | 62.50 |
| 20 | தனலட்சுமி,<br>கழிப்பிடம் துலக்குபவர் | Ukskilled | 1810/– | 13000 | 500 | 62.50 |
| 21 | சி. கோவிந்தராஜ்,<br>குடிநீர் விநியோக பணியாளர் | Ukskilled | 400/– | 13000 | 500 | 62.50 |
| 22 | என். வரதன்,<br>கழிப்பிடம் துலக்குபவர் | Ukskilled | 900/– | 13000 | 500 | 62.50 |
| 23 | வி. அங்காத்தாள்,<br>கழிப்பிடம் துலுக்குபவர் | Ukskilled | 900/– | 13000 | 500 | 62.50 |
| 24 | சி.செல்லம்மாள்,<br>கழிப்பிடம் துலுக்குபவர் | Ukskilled | 300/– | 13000 | 500 | 62.50 |

எனவே மேற்படி தொகுப்பூதிய பணியாளர்களுக்கு மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மதுரை மாநகராட்சியில் வழங்கப்பட்டது போல் மேற்படி பணியாளர்களுக்கும் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கலாம். மேலும் பார்வை **10**ல் காணும் அரசாணையில் அகவிலைப்படி (Dearness allowance) கீழ்க்கண்டவாறு கணக்கிட்டு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**01.01.2017** முதல் **31.12.2017** வரையுள்ள Average Consumer Price Index Number of the Chennai city for the year 2010, that is 161 points(with base year 2001 - 100)and for every raise of one point over and above 161 points, an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance.

The dearness allowance shall be calculated every year on the first April on the basis of the average of the Consumer Price indices of the preceding 12 (twelve) months, that is from January to December.

The first calculation of the dearness allowance shall thus be effective from the date of publication of this notification in the Tamil Nadu Government Gazette, based on the Average Chenni City Consumer Price Index Number of the previous year.

01.01.2017 முதல் **31.12.2017** வரையுள்ள Average Consumer Price = 255
(-) 01.01.2017 முதல் **31.12.2017** வரையுள்ள Base points (as per Go) = 161
-------------
**மீதம் 94**
==========
an increase of Rs.37.25 = 94 x 37.25 = Rs.3501.50

01.01.2018 முதல் **31.12.2018** வரையுள்ள Average Consumer Price = 261
(-) 01.01.2018 முதல் **31.12.2018** வரையுள்ள Base points (as per Go) = 161
-------------
**மீதம் 100**
==========

an increase of Rs.37.25 = 100 x 37.25 = Rs.3725

ஒவ்வொரு வருடமும் அவ்வருடத்தின் முந்தைய காலண்டர் வருடமான ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள புள்ளிகளை புள்ளியியல் துறையிலிருந்து பெற்று அதனை **12**ஆல் வகுத்தால் வருவது தான் அவ்வருடத்திற்குண்டான புள்ளியாகும். அப்புள்ளியிலிருந்து Base pointsஐ கழித்தால் வரும் புள்ளிகளுக்கு (points) கணக்கிட வேண்டும். காலண்டர் வருடத்திற்கு கணக்கிட்டு நிதியாண்டிற்கு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

எனவே இம்மாநகராட்சியில் பணிபுரியும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு மேற்படி அரசாணையின்படியும், மதுரை உயர் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும் அரசாணை அரசிதழில் வெளியிட்ட நாளான **22.11.2017** முதல் வழங்கவும், அகவிலைப்படி 22.11.2017 முதல் **31.03.2018** முடிய மாதம் ஒன்றிற்கு ரூ.**3502/–** வழங்கவும் மற்றும் **01.04.2018** முதல் **31.03.2019** முடிய மாதம் ஒன்றிற்கு ரூ.**3725/–** வழங்கலாம். மேலும் இவ்வூதியம் தொடர்பாக பின்னாளில் அரசிடமிருந்து திருத்தங்கள் ஏதும் வரப்பெற்றாலோ அல்லது தணிக்கையில் தடைகள் ஏதும் எழுப்பப்பட்டாலோ சம்பந்தப்பட்ட ஊழியர்களின் ஊதியத்தில் மேற்படி மிகை தொகை பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு உத்திரவிடலாம். இந்த நிபந்தனையினை பூர்த்தி செய்யும் விதமாக ரூ.**20/–** மதிப்பு முத்திரை தாளில் எழுதி கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.**5734/2011**/எம்சி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 5 நாள் 30.01.2019</u>**

அனுமதிக்கப்பட்டது

-----------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 6

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - பொதுமக்கள் நலன் கருதி ஹோமியோபதி மருத்துவர் -தொகுப்பூதிய அடிப்படையில் பணிநியமனம் செய்தல்– மன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொகுப்பூதிய அடிப்படையில் ஹோமியோபதி மருத்துவ அலுவலர் பணி வழங்க என்.பிரீத்தி, ஹோமியோபதி மருத்துவர் தமது விண்ணப்பத்தில் கோரியுள்ளார். உதவி ஆணையர்(நிர்வாகம்) அவர்களின் குறிப்பின் வாயிலாக மேற்படி மனுவிற்கு மேல்நடவடிக்கை தொடர கேட்டுக்கொண்டுள்ளார்.

‘அ’ அதன்படி கோவை மாநகராட்சியில் இதுவரை ஹோமியோபதி மருத்துவர் இல்லாத காரணத்தாலும், மேலும் பொது மக்கள் நலன் மற்றும் பொது சுகாதார நலன் கருதியும் ஹோமியோபதி மருத்துவ அலுவலர் ஒருவரை நியமனம் செய்யலாம். மேற்படி நியமனம் செய்யப்படும் ஹோமியோபதி மருத்துவ அலுவலரை தொகுப்பூதியம் அடிப்படையில் நியமனம் செய்யலாம்,

‘ஆ’ NUHM திட்டத்தின் கீழ் அலோபதி மருத்துவத்திற்கு மட்டுமே தொகுப்பூதிய அடிப்படையில் மருத்துவ அலுவலர், செவிலியர், மருந்தாளுநர் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர் ஆகிய பணியிடஙகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஹோமியோபதி மருத்துவ அலுவலருக்கு மாநகராட்சி பொது நிதியில் தொகுப்பூதியம் அடிப்படையில் பணியமர்த்தம் செய்யலாம்.

‘இ’ மேலும் பணியமர்த்தம் செய்யப்படும் ஹோமியோபதி மருத்துவ அலுவலருக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ. 20,000 /- என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்து ஓராண்டு காலத்திற்கு பணிநியமனம் செய்யலாம். ஒராண்டு காலத்திற்கான செலவினத்தொகை ரூ.2,40,000/-க்கும் மற்றும் இப்பணி நியமனத்திற்கும் மன்றத்தில் அனுமதி பெறலாம். அவ்வாறு தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்படும் ஹோமியோபதி மருத்துவ அவலுலரை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் பணியமர்த்தம் செய்யலாம்.

‘ஈ’
1. இப்பணியிடமானது ஓராண்டு காலத்திற்கு மட்டுமே செல்லத்தக்கது.
2. தேவைப்படும் பட்சத்தில் ஆண்டு தோறும் இப்பணிகான காலத்தை புதுப்பித்துக் கொள்ளலாம்.
3. இப்பணி முற்றிலும் தொகுப்பூதியத்தின் அடிப்படையில் மட்டுமே பணியமர்தம் செய்யப்படுகிறது.
4. பணி நிரந்தரம், மற்றும் ஊதிய உயர்வு போன்றவை வழங்கப்பட மாட்டாது.
5. பின்னாளில் பணி நிரந்தரம், மற்றும் ஊதிய உயர்வு போன்றவை கோரி மனுதாரர் விண்ணப்பம் செய்ய கூடாது.
6. மாநகராட்சி விதிகளுக்கு கட்டுப்பட்டே ஹோமியோபதி மருத்துவ அலுவலர் பணிபுரிய வேண்டும்.
7. இப்பணியிடத்தை எப்போது வேண்டுமானாலும் நிறுத்தம் செய்ய ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

‘உ’ மேலும் தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சியில் வடக்கு மண்டலத்தில் வார்டு எண்-41-க்குட்பட்ட கணபதி பகுதியில் கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் சித்தா மருத்துவமனையில் கட்டிடம் புதிதாக கட்டப்பட்டுள்ளது. மேற்காண் சித்தா மருத்துவமனையில் அல்லது ஏற்கெனவே உள்ள சித்தாமருத்துவமனயைில் ஹோமியோபதி மருத்துவத்திற்கு இடம் ஒதுக்கி பொது மக்களுக்கு சிசிக்சைகளை மேற்கொள்ளச் செய்யலாம்.

‘ஊ’ மேலும் மேற்படி ஹோமியோபதி மருத்துவ அலுவலர் பொது சுகாதாரம் மற்றும் நகர்நல அலுவலர் கட்டுப்பாட்டில் பணிகளை மேற்கொள்ளகோரலாம்.

‘அ, ஆ, இ, ஈ, உ மற்றும் ஊ இவற்றிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம். ந.க.எண். 189 /2019/ எம். இ.1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 6 நாள் 30.01.2019</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - மாதந்திர வணிகவளாகங்கள் 2018-2021- க்கான பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 28.12.2018-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - தொடர்பாக.

பார்வை : 1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள். 28.12.2018.
2. மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவாகளின் உத்தரவு நாள்.02.01.2019.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், 2018-2021 மாதந்திர வணிகவளாகம் மற்றும் குத்தகை இனங்களுக்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 28.12.2018-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள இனங்களின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அ) ஏலம் நடைபெற்ற தேதி – 28.12.2018, வருடாந்திர குத்தகை இனங்கள்

| இனம் | குத்தகை இனங்கள் | அரசு நிர்ணயத் தொகை (ரூ) | ஏலதாரர் பெயர் | 7 -வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை ரூ. | உயர்ந்த பட்ச ஏலத் தொகை தொகை ரூ. |
| 3 | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 49,72,274/- | M.பழனிசாமி<br>S.முகமது சலீம் | 25,62,000/-<br>23,10,000/- | -<br>- | 25,62,000/-<br>- |

கோயம்புத்தூர் மாநகராட்சி பன்னீர் செல்வம் பூமார்க்கெட் சுங்கக்கட்டணம் வசூலிக்கும் உரிமம் கடந்த ஆண்டு 2015-2016 அரசு மதிப்பு ரூ.26,48,067/- இருந்த நிலையில் ஏலத்தில் பங்குபெற்ற போட்டியாளர்களில் திரு.ஜெகதீசன் என்பவர் ரூ. 45,09,999/- ஏலத்தில் எடுத்தார். 2016-17 இரண்டாம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்த குத்தகைத்தொகை ரூ. 47,35,499/- ஆகும். 2017-18 மூன்றாம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்த குத்தகைத்தொகை ரூ. 49,72,274/- அதிகமாக உள்ளதாலும், தனக்கு நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினால் 2017-18 ம் ஆண்டு (1.04.2017) மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துவிட்டார். அன்னாரின் டெபாசிட் தொகை ரூ.2,00,000/- மாநகராட்சி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை இனம் மாநகராட்சியால் ஏழு முறை ஏலம் விடப்பட்டது. இறுதியாக 8-வது முறையில் 28.12.2018 ஏலத்தில் M.பழனிசாமி என்பவர் ரூ.25,62,000/- மற்றும் திரு. S.முகமது சலீம் என்பவர் ரூ.23,10,000/- ஏலம் கோரியுள்ளனர்.

2017-18 ம் ஆண்டு மாநகராட்சி பணியாளர்களை கொண்டு ரூ.8,95,030/- மற்றும் 2018 ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ.6,35,220/- மொத்தம் ரூ. 15,3,250/- துறை வசூல் செய்யப்பட்டது. தற்போது M.பழனிசாமி அவர்கள் துறை வசூலை விட கூடுதலாக ரூ.25,62,000/- கோரியுள்ளார். கடந்த ஆண்டு 2017-18 மற்றும் 2018-19 ம் ஆண்டு துறை ரீதியான வசூல் செய்ததைவிட குத்தகை தொகை கூடுதலாக இருப்பதாலும், துறை வசூலில் 24 மணி நேரத்திற்கு 3 ஷிப்ட் முறையில் ஒவ்வொரு ஷிப்டிற்கும் தலா இரண்டு பேர் வீதம் வசூல் பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. மேற்படி பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ஒரு நாளைக்கு 750 X 2 = 1,500/- வீதம் 30 நாட்களுக்கு 1500 X 30= 45,000/- வீதம் 12 மாதங்களுக்கு ரூ.5,40,000/- ஊதியமாக வழங்கப்படுகிறது. தற்போது ஒன்பது மாதங்களுக்கு ரூ.6,35,220/- துறை வசூல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2017-18 ல் துறை வசூல் ரூ.8,95,030/- ஆக இருப்பதாலும், மேற்கு மண்டலத்தில் ஏற்கனவே பணியாளர்கள் பற்றாகுறை உள்ள நிலையில் இரண்டு பணியாளர்கள் வசூல் பணிக்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்படி திரு. M.பழனிசாமி ஏலதாரர் 2017-18 துறை ரீதியான வசூலை விட ஏலத் தொகை அதிகமாக கோரியுள்ளதால் மேற்படி குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்யவும் ஆணையாளர் அவர்களின் உத்தரவு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆ) ஏலம் நடைபெற்ற தேதி – 28.12.2018, மாதந்திர வணிகவளாகக் கடைகள்

| இனம் | மாதந்திர வணிகவளாகக் கடைகள் | அரசு நிர்ணயத் தொகை மாதவாடகை ரூ. | ஏலதாரர் பெயர் | 2-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | உயர்ந்த பட்ச ஓப்பந்தப் புள்ளி தொகை ரூ. | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை ரூ. | உயர்ந்த பட்ச ஏலத் தொகை தொகை ரூ. |
| 3 | ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள். பிளாக்எண்.I-ல் கடை எண்.17 | 4,488/- | A.சையத் ஹக்கிம்<br>K. மணிகண்டன் | 5,700/-<br>5,000/- | -<br>- | 5,700/- |
| 8 | ஆரோக்கியசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் புதிய கடை எண்.11 | 17,600/- | திரு. G. விஜயகுமார்<br>R.K.விஜய் அரோரா | 18,100/-<br>15,000/- | -<br>- | 18,100/- |
| 8 | ஆரோக்கியசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் புதிய கடை எண்.31 | 16,210/- | S.சந்திரகுமார்<br>R.மணிகண்டன் | 16,300/-<br>14,500/- | -<br>- | 16,300/- |

இ) ஏலம் நடைபெற்ற தேதி 28.12.2018 மாதந்திரா கடைகள்

| வ. எண். | வணிகவளாக கடைகள் |
|---|---|
| 1 | பன்னீர்செல்வம் பூமார்க்கெட் மேடை கடைகள் (மாதாந்திரவாடகை அடிப்படையில்) F67,F68, F70, F72,G85,G86, G87,H94 |
| 2 | ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள்<br>(பிளாக்எண்.I-ல் கடை எண்கள்.3,4,5,6,7,11,12,13,14,15,18)<br>(பிளாக்எண்.II-ல் கடைஎண்கள். 19,20,21,22,26,27,28,,29,30,31,32,37,41,42,45) |
| 3 | மருதமலை அடிவாரம் கடைகள் கடை எண். 3, 4, 5 மற்றும் 6 வரை (தலா 180 சதுரடி) |
| 4 | மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி வடக்கு பார்த்த கடைகள் கடை எண். 3 முதல் 6,8 மற்றும் (தலா 160 சதுரடி) கடை எண். 10 (128 சதுரடி) |
| 5 | மருதமலை அடிவாரம் மேற்கு பகுதி கிழக்கு பார்த்த கடைகள் கடை எண். 1 முதல் 5 (தலா 80 சதுரடி) |
| 6 | திருவேங்கடசாமி தரை தளம் கடை எண். 8,11 மற்றும் முதல் தளம் கடை எண். 16 முதல் 30 வரை (தலா 160 சதுரடி) |
| 7 | கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலகம் அருகே கட்டப்பட்ட தலா 256 ச.துரடி அளவுள்ள கடை எண். 1 முதல் 3 வரை |
| 8 | கவுண்டம்பாளையம் வார்டு அலுவலகம் கடை எண். 1 (தலா 640 சதுரடி) |
| 9 | கவுண்டம்பாளையம் பிரபு நகர் மாநகராட்சி வணிகவளாகம் கடை எண். 4,8,9 மற்றும் 10 |
| 10 | ஆரோக்கியசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் புதிய கடை எண். 2 ,3, 4,12,13,27,28,37,மற்றும் 40 |
| 11 | ஆரோக்கியசாமி ரோடு மாநகராட்சி வணிகவளாக கடைகள் (தென்புறம்) கடை எண். 38 |
| 12 | ஆரோக்கியசாமி ரோடு ரூம்ஸ் மாநகராட்சி வணிகவளாக கடை எண். 15,16 |
| 13 | மேட்டுப்பாளையம் ரோடு பேருந்து நிலையம் 2-வது தளம் கடை எண்.1,2 மற்றும் 3 (தலா 1000 சதுரடி) |
| 14 | லிங்கனூர் ரோடு மாநகராட்சி வணிகவளாகம் தரை தள கடைகள் கடை எண். 4 மற்றும் 5. (தலா 192 சதுரடி) |

இனம் 3 –ல், ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள். பிளாக்எண்.I-ல் கடை எண்.17 -க்கு திரு. A.சையத் ஹக்கிம் என்பவர் அரசு நிர்ணயித்த தொகை ரூ.4,488/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.5,700/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி மாதாந்திர வாடகை இனம் மாநகராட்சியால் பல முறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் ஏலம் கோரவில்லை என்பதாலும், தற்போது நடைபெற்ற ஏலத்தில் ஒருவர் மட்டும் அரசு மதிப்பபைக் காட்டிலும் அதிகமாக ஏலம் கோரியுள்ளதால் திரு. A.சையத் ஹக்கிம் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 8 –ல், ஆரோக்கியசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் புதிய கடை எண்.11-க்கு திரு. K.B. வெங்கடேசன் என்பவர் அரசு நிர்ணயித்த தொகை ரூ.17,600/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.18,100/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். நோட்டரி அவிடவிட் எண். 58AB 799462 நாள். 28.12.2018 அன்று திரு.வெங்கடேசன் பெயரிலிருந்து திரு. G.விஜயகுமார் என்பவரின் பெயருக்கு மாற்றம் செய்வதற்கு ரூ.20/- மதிப்புள்ள முத்திரை தாளில் ஆட்சேபனை சான்று வழங்கியுள்ளார். எனவே, திரு. G. விஜயகுமார் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

இனம் 8 –ல், ஆரோக்கியசாமி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் புதிய கடை எண்.31-க்கு திரு. S.சந்திரகுமார் என்பவர் அரசு நிர்ணயித்த தொகை ரூ.16,210/-ஐ விட மாதவாடகை அதிகமாக ரூ.16,300/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி மாதாந்திர வாடகை இனம் மாநகராட்சியால் பல முறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் ஏலம் கோரவில்லை என்பதாலும், தற்போது நடைபெற்ற ஏலத்தில் ஒருவர் மட்டும் அரசு மதிப்பபைக் காட்டிலும் அதிகமாக ஏலம் கோரியுள்ளதால் திரு. S.சந்திரகுமார் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

அ) இனம் 3-ல் உள்ள குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்யலாம்
ஆ) இனம் 3-ல் கடை எண் 17, இனம் 8-ல் கடை எண் 11 மற்றும் கடை எண்.31 ஆகிய 3 இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்று மாதாந்திர வாடகை இனங்களை ஒப்படைப்பு செய்யலாம்.
இ) வரிசை எண். 1 முதல் 14 வரை உள்ள மாதாந்திர வணிக வளாக கடைகளை எவரும் ஏலம் கோர முன்வராததால் மறு ஏலம் கோரலாம்.

எனவே 28-12-2018-ல் நடைபெற்ற ஏலத்தில் வரிசை (அ)-ல் இனம் 3, குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்யவும், வரிசை (ஆ)-ல் 3 மாதாந்திர வாடகை இனங்களை ஒப்படைப்பு செய்யவும், வரிசை (இ)–ல் உள்ள மாதாந்திர வணிக வளாக கடைகளுக்கு மறு ஏலம் கோரவும், ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் உத்தரவின்படி ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 1610 /2018 /A1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 7 நாள் 30.01.2019</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 55க்குட்பட்ட பகுதியில் மழைநீர் வடிகால்களை துர்வாருதல் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளின் பராமரிப்பு பணிகளுக்கு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ந.க.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 1 | 679/2019/எம்.டி.2 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 55க்குட்பட்ட நியூ ஸ்கீம் ரோடு, குப்புசாமி நாயுடு மருத்துவமனை அருகில் உள்ள மழைநீர் வடிகாலை துர்வாருதல் மற்றும் சிறுபாலம் உயர்த்தி கட்டுதல் | 9,80,000/- |
| 2 | 530/2019/எம்.டி.2 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 55க்குட்பட்ட பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளுக்கு உபகரணங்கள் மற்றும் குழழய்கண் பதித்தல் பணி மேற்கொள்ளுதல் | 9,30,000/- |
| 3 | 529/2019/எம்.டி.2 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 55க்குட்பட்ட காய்கடை பேருந்து நிறுத்துமிடம் இருந்து சங்கனூர் பள்ளம் வரையுள்ள மழைநீர் வடிகால்களை துர்வாருதல் | 9,30,000/- |

மேற்படி உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 679/2019/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 8 நாள் 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - 02 ஒப்பந்ததாரர்களுக்கு காலாவதியான 05 பணிகளுக்கான டேவணித் தொகையை வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை : 1. அரசு ஆணை எம் எஸ் ஏ2 எண். 621,ஊ.வ மற்றும் உள்ளாட்சி துறை நாள்.08.04.1980.

2. டேவணித் தொகை வழங்க கோரிய 05 விண்ணப்பங்கள்.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், முடிக்கப்பட்ட பணிகள் தொடர்பாக 2 ஒப்பந்ததாரர்கள் டேவணித் தொகையை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பித்த 5 பணிகளுக்காக செலுத்திய டேவணித் தொகை, மூன்று வருடத்திற்கு மேல் ஆகி விட்டதால் பார்வை(1)ல் காணும் அரசாணையின் படி காலாவதியாகி விட்டது.

ஒப்பந்ததாரர்கள் டேவணித் தொகை செலுத்திய விபரம் கீழ்வருமாறு

| வ. எண் | ஆண்டு | ஒப்பந்ததாரர் பெயர் | பணி | செலுத்திய சீட்டு எண், நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2014-2015 | டீ. ரோஸி | வார்டு.எண். 28, 29, 30, 31 சரவணம்பட்டி பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய பதித்தல் பணி | 201407011364/ 01.07.2014 | 4750/- |
| 2 | 2014-2015 | டீ. ரோஸி | வார்டு.எண்.1, 2, 3, 4 துடியலூர் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் பதித்தல் பணி | 201407011408/ 01.07.2014 | 4750/- |
| 3 | 2014-2015 | டீ. ரோஸி | வார்டு.எண்.1, 2, 3, 4 துடியலூர் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் பதித்தல் பணி | 201410094286/ 09.10.2014 | 4750/- |
| 4 | 2014-2015 | டீ. ரோஸி | வார்டு.எண். 28, 29, 30, 31 சரவணம்பட்டி பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் பதித்தல் பணி | 201410131827/ 13.10.2014 | 4750/- |
| 5 | 2015-2016 | எ.விஜய குமார் | வார்டு.எண்.30 மழைநீர் வடிகால் கட்டுதல் பணி | 201507083732/ 08.07.2015 | 4000/- |
| மொத்தம் | | | | | 23000/- |

மேற்காண் பணிகள் முடிக்கப்பட்டு, பணி தொடர்பான தணிக்கை தடை ஏதும் இல்லை என செயற்பொறியாளர் அவர்கள் சான்றளித்துள்ளார். எனவே, மேற்காண் ஒப்பந்ததாரர்களுக்கு காலாவதியான டேவணித் தொகையை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 009216 /2018 /பி2(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 9 நாள் 30.01.2019**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண் 20-க்குட்பட்ட சீரநாயக்கன்பாளையம் பொன்னுசாமி நகர் அருகில் இராதாகிருஷ்ணன் வீதியில் உள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் கட்டிடத்திற்கு கூடுதல் அபிவிருத்தி பணிகள் செய்தல் பணிக்கு ரூ.49,95,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நடப்பு நிதியாண்டு 2018-2019-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 1034/2019/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 10 நாள் 30.01.2019**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

| | |
|---|---|
| பொருள்- | பொதுக் கணக்குப் பிரிவு - காலாவதியான வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கேட்டல் - தொடர்பாக |
| பார்வை - | 1. அரசாணை எண் எம்.எஸ். 621 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 08.04.1980<br>2. அபி அசோசியேட்ஸ் நிறுவனத்தின் விண்ணப்ப நாள் - |

